# பழந்தமிழர் இலக்கியங்களில் கலைவளர்ச்சி

முனைவர் இல.தங்கராஜ்
த.பே.மா.லு கல்லூரி, பொறையார்

மனிதர்கள் காலந்தொறும் மிகுதியாகச் சிந்தித்துள்ளனர். அவர்தம் சிந்தனை, பெரும்பாலும் பிறப்பிற்கு முன் இறப்பிற்குப் பின் ஆழ்ந்த கவனம் செலுத்துவதாக இருந்தது. மறுமை, மறுபிறப்பு, வீடுபேறு முதலானவற்றை முன்நிறுத்தி தம் நிகழ்கால வாழ்வைக் கருத்து அளவில் கட்டியமைக்க முயன்றனர். பறவைகளும், விலங்குகளும் பிறரைப் பற்றிக் கவலைப்படுவதில்லை; தம்முடைய பசிக்கு இரை தேடுவதற்கே ஓடியாடித் திரிகின்றன; உண்டு, உறங்கித் தம்மினத்தைப் பெருக்கி வாழ்கின்றன. அவைகளின் வாழ்வில் எத்தகைய மாறுதல்களையும் காணமுடியாது. எண்ண முடியாத ஆண்டுகளாக அவைகளின் வாழ்க்கை ஒரே நிலையில் தான் இருக்கிறது. மக்களுடைய வாழ்வு ஆண்டுக்கு ஆண்டு மாறிக்கொண்டே வருகின்றது. ஒரு காலத்தில் விலங்குகளைப் போலவே பிறந்த மேனியாக மக்கள் வாழ்ந்தனர். இயற்கையாக விளைந்த உணவை உண்டு உறங்கினர். நாளடைவில் அவர்கள் பலதுறைகளிலும் வளர்ச்சியடைந்தனர். இவ்வாறு வளர்ச்சியடைந்த மக்கள் கலைத் துறையில் அடைந்த வளர்ச்சியை இலக்கியங்களின் வாயிலாக காண்பதுவே இக்கட்டுரையின் நோக்கம்.

கலையென்பது கற்றுக்கொள்வது. கற்றுக்கொண்டு செய்யும் தொழில்கள் அனைத்துக்கும் கலை என்று பெயர். பண்டைக்காலத்தினர் தொழில்களை அறுபத்து நான்காக வகுத்தனர். அந்த அறுபத்து நான்கு தொழில்களையும் அறுபத்து நான்கு கலைகள் என்று கூறினர். ஆடைக்கும் கலை என்று பெயர். கற்றுக்கொண்டு செய்யக்கூடிய தொழில் நெசவுத் தொழில் அதனால் நெசவுத் தொழிலின் பயனாகிய ஆடையைக் கலை என்று கூறினர்.

மனிதனுடைய ஒவ்வொரு செயல்களுமே கலை வடிவம் பெறுகின்றன படித்தறிந்தோ, படிக்காமல் கண்ணார பார்த்து உள்ளதால் உணர்ந்து கையால் செய்யக் கற்றுக்கொண்டோ இயற்றப்படும் தொழில்கள் எல்லாம் கலைகள் என்று

கருதப்படுகின்றன. நம் காலத்தினர் இவ்வுண்மையை மறைத்தனர். நாடகம், சங்கீதம் இசைக்கருவிகளை வாசித்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டவர்கள் மட்டும் கலைஞர்கள் என்று கருதுகின்றனர். ஏனைய தொழில் செய்பவர்களைக் கலைஞர்கள் என்று எண்ணுவதில்லை. இது தொழில் உயர்வு தாழ்வு தோன்றியபோது தோன்றிய எண்ணம்.

பண்டைத் தமிழகத்தில் பல கலைகள் வளர்த்திருந்தன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் ஆக்கிக் கொள்ள அறிந்திருந்தனர். இன்பமாகக் கேட்டும் பார்த்தும் பொழுதுபோக்குவதற்கான இசை, நாடகம் முதலிய கலைகளிலும் சிறந்திருந்தனர். இவற்றைச் சங்க இலக்கியங்கள் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன.

**கட்டடக் கலை**

ஒரு நாட்டின் சிறந்த நாகரிகத்தைக் காட்டுவது அந்நாட்டில் அமைந்திருக்கும் கட்டடங்களாகும். கட்டடங்களின் அமைப்பும் வேலைப்பாடும் அந்நாட்டு மக்களின் அறிவுக்கும் முயற்சிக்கும் அடையாளமாகும். பழந்தமிழர்கள் மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் கொண்ட நகரங்களை அமைத்திருந்தனர்.

"மாடம் ஓங்கிய மணல் மலி மறுகின்"

என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. மாளிகைகள் வானளவு உயர்ந்திருக்கிற மணல் நிறைந்த வீதிகளைக் கொண்டுள்ளது என்றும்,

"விண் பொர நிவந்த வேயா மாடத்து"

என்று வானத்துடன் போர் செய்வது போல் உயர்ந்திருக்கின்ற கூறையற்ற மாடிக்கட்டடங்களைக் கொண்டுள்ளது என்று கூறுகின்றது.

**அரண்மனை**

பண்டைத் தமிழகத்திலே கட்டடக் கலையைக் கற்றறிந்து தேர்ந்தவர்கள் கட்டடங்களைக் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்தும் கொடுப்பதுடன் நிலத்தில் அடையாளம் இட்டுக் கொடுப்பார்கள். இவ்வாறு குறியிடுவதை இக்காலத்தில் சதுரித்தல் என்று கூறுகின்றனர்.

பண்டைக்காலத்துச் சிற்பிகள் மனையயை சதுரிக்கும்போது திசைகளை வணங்குவார்கள் தெய்வத்திற்குப் பலியிட்டுக் கதிரவன் ஒரு பக்கத்திலும் சாயாமல் உச்சியிலே நிற்கும் நடுப்பகலிலே மனையைச் சதுரித்தும் மனையடி சாத்திரம் கற்ற அவர்கள் நன்றாக ஆராய்ந்து கயிறு பிடித்து அரசர்கள் வாழ்வதற்கு தக்கபடி மனையிலே பல பகுதிகளும் அமையும்படி திட்டம் வகுத்துக் கொடுப்பதை

"ஒரு திறம் சாரா அறைநாள் அமயத்து
நூல் அறி புலவர், நுண்ணிதில் கயிறு இட்டுத்
தே எம் கொண்டு, தெய்வம் நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து" - என்று நெடுநல் வாடை பாடல்வரிகள் குறிப்பிடுகின்றன. இதனால் சிறந்த கட்டடங்கள் கட்டப்பட்டன என்பதை அறியலாம்.

**நெசவுக் கலை**

பண்டைத் தமிழர்கள் நெசவுத் தொழிலிலே சிறந்து விளங்கினர். பருத்தி நூல் ஆடைகளையும் பட்டாடைகளையும் நெய்வதிலே கை தேர்ந்தவர்கள். பூ வேலைப்பாடு மிக்க அழகு அழகான கரைகள் போட்ட உடைகள் செய்தனர்.

பாம்பின் தோல் போன்ற மெல்லிய பளபளத்த தோற்றம் உடையதும் அடையும் மூங்கில் தண்டின் உட்புறத்தேயுள்ள வெண்மையான தோல் போல நெய்யப்பட்டுள்ள நூல் வரிசை கண்ணுக்குத் தெரியாத ஒளி பொருந்திய ஆடைகளையும் நெய்தனர் என்பதை

"பாம்புஉரி அன்னவடிவினை காம்பின்

கழைபடு சொலியின், இழை அணி வாரா

ஒண்பூம் கலிங்கம்"-என்று புறநானூற்றுப் பாடல் அடிகள் கூறுகின்றன. பட்டு நூலாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும் நெசவுத் தொழில் செய்யும் திறமை படைத்த நெசவாளர்கள் தமிழகத்தில் இருந்தனர் என்பதை

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்

கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்" - என்று சிலப்பதிகாரம் இந்திர விழவு ஊர் எடுத்த காதை குறிப்பிடுகின்றது.

**இசை, நாடகக் கலை**

பண்டைத் தமிழகத்திலே இசைக்கலை மிகவும் வளர்ந்து புகழ் பெற்றிருந்தது. இன்று கர்நாடக சங்கீதம் என்று போற்றப்படும் நுண்கலை பண்டைத் தமிழிசையின் வளர்ச்சிதான் என்பது இசைக்கலை வல்லுநர் பலரின் கருத்தாகும். இசையும் நாடகமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. நாடகம் இல்லாமல் இசையுண்டு, ஆனால் இசையில்லாமல் நாடகம் இல்லை. தமிழர்கள் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என்று மூவகையாகப் பிரித்துக் கூறினர். இதுவே தமிழர்களின் கலையுணர்ச்சியையும் கலைச் சிறப்பையும் காட்டுவதாகும். பண்டைத் தமிழகத்தில் இசைக் கலை நாடகக் கலைகளை வளர்ப்பதற்கென்று ஒரு தனிப்பட்ட வகுப்பினரே இருந்தனர்.

**கூத்தர்:** இவர்கள் தொழில் கூத்தாடுதல் கூத்தில் இருவகை உண்டு. ஒன்று ஏதேனும் ஒரு கதையை நடித்துக் காட்டுவது, மற்றொன்று ஒரு பாடலை பொருள் விளங்கும்படி அபிநயத்துக் குதிப்பது.

**பாணர்:** பாண என்பது யாழ், பண் என்பதிலிருந்து பாண் பிறந்தது. பண் என்பது இசை, பண் என்னும் இசையைத்தரும் கருவியைப் பாண் என்று கூறினர். பாண் வாசித்தலைத் தொழிலாகக் கொண்டவர்கள் பாணர்கள்.

**பொருநர்:** இவர்களில் ஏர்க்களம் பாடுவோர் போர்க்களம் பாடுவோர் பாடுவோர் பரணி பாடுவோர் என்று பலகையினர் உண்டு. தானியத்தை குவிக்கும் இடத்தையும், வணிகர் வேளாளர் குறுநில மன்னர் முதலியோரையும் புகழ்ந்து பாடுவது ஏர்க்களம் ஆகும். போர்க்களத்தைப் போற்றிப் பாடுவது போர்க்களம் பாடுதலாகும். போரில் வெற்றி பெற்ற அரசனுடைய வீரத்தைப்பாடுவது பரணி பாடுவதாகும்.

கூத்தர், பாணர், பொருநர் முதலியவர்கள் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் மேற்கொண்ட தொழில்கள் காரணமாக தனித்தனிப் பெயரிட்டு அழைத்தனர் என்று கருத இடமுண்டு. இதனை

"கூத்தரும், பாணரும், பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்" - என்று

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் புறத்திணையில் 36வது நூற்பா குறிப்பிடுகிறது.

**உலோகப் பொருள்களில் கலை**

பண்டைத் தமிழர்கள் இரும்பு, பொன், வெள்ளி, செம்பு போன்ற உலோகப் பொருள்களைக் கொண்டு பல கருவிகளைச் செய்து வந்தனர். பொன் போன்ற உயர்ந்த உலோகங்களால் அழகுக்காக மக்கள் அணியும் அணிகலன்களையும் செய்து வந்தனர்.

வருதார் தாங்கள் வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று இரு வகைப்பட்ட பிள்ளைநிலையும் என்ற பொருளதிகாரம் புறத்தினை சூத்திரம் ஐந்தில் தன்னை கொன்று தானும் இறத்தல் ஆகிய இரண்டு வகையான செயல்களைப் பிள்ளை நிலா என்று கூறுகிறது.

"வாள் மலைந்து எழுந்தோனை, மகிழ்ந்து பறை தூங்க
நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டும்"

என்ற தொல்காப்பியப் புறத்தினை ஐந்தாவது சூத்திர வரிகள் வாளால் போர் செய்து வெற்றி பெற்று உயர்ந்தவனுக்கு மகிழ்ச்சியுடன் பறை முழங்கும்படி நாட்டைப் பரிசளித்து அவ்வீரனைப் பாராட்டு நிகழ்வை பிள்ளை விளையாட்டு என்று கூறுகிறது. இதன் மூலம் இரும்பு உலோகத்தால் வாள் வடித்துக் கொடுத்த நிகழ்வைக் கூறுகிறது.

"ஒளிறுவாள் அரும் சமம்", "வேல் மிகு தானை வேந்தன்", "எம் அம்பு கடிவிடுதும்" என்பன புறநானூற்றுச் செய்யுள் வரிகள். இவை பல்வேறு உலோக பொருள்களால் வாள், வேல், அம்பு போன்ற கருவிகளை செய்ததைச் சங்க இலக்கியம் தெளிவாகக் காட்டுகின்றது.

**ஓவியக் கலை**

ஓவியக் கலை என்பது ஒரு சிறந்த கலை. நடந்த பல நிகழ்ச்சிகளை படமாக வரைந்து காட்டுவது கைத்திறமும் நுண்ணறிவும் உள்ளவர்களே சிறந்த ஓவியராக முடியும். கற்பனை உள்ளம் படைத்த ஓவியர் தாம் கைத்திறம் உள்ள ஓவியராகவும் உயர முடியும். இக்கலையின் மூலம் மக்களுக்குப் பல உண்மைகளையும் அறிவையும் ஒழுக்கத்தையும் புகட்ட முடியும். ஓவியக் கலை கண்ணையும் கருத்தையும் கவரும் ஒரு சிறந்த கலை. பண்டைத் தமிழர்கள் இக்கலையை மக்களுக்குப் பல உண்மைகளையும் அறிவையும் ஒழுக்கத்தையும் புகட்ட முடியும். ஓவியக் கலை கண்ணையும் கருத்தையும் கவரும் ஒரு சிறந்த கலை. பண்டைத் தமிழர்கள் இக்கலையை மக்களுக்கு நல்லிறிவூட்டவும், நீதிநெறிகளைக் கற்பிக்கவும் பயன்படுத்தி வந்தார்கள்.

சூரியனுடன் சேர்ந்து சுழல்கின்ற சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவை சக்கரவடிவான, கிரியைச் சுற்றி வருவதைப் போல் எழுதப்பட்டிருப்பதும், இரதி மன்மதன் உருவங்கள் இணைப்பாக எழுதப்பட்டிருப்பதுமான காட்சியினை

"என்றூழ் உறவரும் இருசுடர், நேமி
ஒன்றிய சுடர்நிலை உள் படுவோரும்
இரதி, காமன், இவள், இவன் எனாஅ
இன்னபலபல எழுத்து நிலை மண்டபம்
துன்னுநர் சுட்டவும், சுட்டு அறிவுறுத்தவும்"

என்று பரிபாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

"ஓவத்து அன்ன வினைபுனை நல்கில்"

என்ற பதிற்றுப் பத்துப்பாடல் வரியானது சித்திரத்தைப் போன்ற வேலைப்பாடு அமைந்த நல்ல வீடு என்ற செய்தியைக் குறிப்பிடுகின்றது.

**மருத்துவக்கலை**

பண்டைத் தமிழர்கள் மருத்துவக் கலையிலே சிறந்து விளங்கியதால் ஏற்பட்ட வளர்ச்சியே இன்று சித்த வைத்தியம் என்னும் பெயருடன் சிறந்து விளங்குகிறது.

"அரும்பிணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன்"

என்ற நற்றிணை 136வது பாடல் வரிகள் நீக்குதற்குரிய நோயைப் பெற்றவர்களுக்கு அவர் தின்ன விரும்பியவைகளைக் கொடுக்காமல், அவர் நோய் தனிவதற்கான மருந்தை ஆராய்ந்து கொடுத்த அறநெறியை உடையவன் அறவோன் என்று கூறுவதைக் காணலாம். தமிழர்களின் மருத்துவக் கலைத் தேர்ச்சியின் சிறப்பைக் காணவேண்டுமானால் திருக்குறள் போதுமானதாகும். மருந்து என்னும் அதிகாரத்தில் பத்துக்குறள்களில் ஏழு குறள்கள் உணவைப் பற்றியே கூறுகின்றன. உணவு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்பது முதல் குறள். நல்ல உணவை அளவோடு உண்டால் உயிருக்கு ஆபத்து இல்லை என்பது ஐந்தாவது குறள். முதலில் நோய் இன்னது என்று தெரிந்து கொள்ள வேண்டும் பிறகு நோய் வந்த காரணத்தை அறிய வேண்டும் பின்னர் நோயைத் தனிக்கும் வழியைக் காணவேண்டும் அதன்பின் தகுந்த மருந்து கொடுக்க வேண்டும் என்பதை

"நோய் நாடி நோய் முதல் அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" - என்று குறள் கூறுகிறது.

நோயாளி, மருத்துவன், மருந்து, நோயாளியின் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொள்ளுகின்றவன் என்று நான்கு பகுதியை உடையது மருத்துவ முறை என்பதை

"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
அப்பால் நாற் கூற்றே மருந்து" - என்று குறள் குறிப்பிட்டுள்ளது.

**வானநூல் அறிவு**

பண்டைத் தமிழர்கள் வானத்தில் உள்ள கிரகங்களின் மாறுபாட்டால் நிகழும் இயற்கை வேறுபாடுகளை அறிந்திருந்தனர்.

"குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேறும் அகல்இருள் நடுநாள்
மறுகு விளக்கு உறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலர் உடன் துவன்றிய விழவு"

என்ற அகநானூறு 141வது பாடல் வரிகளில் சிறிய முயலாகிய மறு தன் மார்பிலே விளங்க கார்த்திகை நட்சத்திரமும் சந்திரனும் சேர்ந்து இருக்கும் நாளில் நள்ளிரவில் வீதியிலே விளக்கேற்றி வைத்து மலர் மாலைகள் தொங்கவிட்டு பலரும் கூடிவிழா கொண்டாடும் நிகழ்வை கார்த்திகை விழா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரனை உரோகிணி நட்சத்திரம் சேரும் நன்னாளிலே அருந்ததி போன்ற கண்ணகியை, வயதேறிய அந்தணன் வேதநெறி சடங்குகள் செய்து காட்ட கோவலன் கண்ணகியுடன் தீயை வலம் செய்கின்ற காட்சியைக் காண்பவர்கள் கண்கள் செய்த தவம் யாதோ! என்று அந்த திருமண நிகழ்வை சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல்வரிகள்,

"வான்ஊர் மதியம் சகடுஅணைய வானத்துச்
சாலிஒரு மீன் தகையானைக் கோவலன்
மாமுது பார்ப்பன் மறைவழி காட்டித்
தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை"

என்று குறிப்பிடுவதைக் காணலாம். பண்டையத் தமிழர்களில் வானநூல் அறிவுக்குச் சான்றாக இலக்கியங்கள் விளங்குகின்றன.

பண்டைத் தமிழர்கள் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் சிறந்த கலைகள் பலவற்றையும் அறிந்திருந்தனர் என்பதைத் தமிழ் இலக்கியங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.